1978 மார்ச் 14]

இணைப்பு II.

[402ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 567 க்கான விடையைக் காண்க].

(அ) திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் முன்னிலையில் கைத்தறி தொழிலாளர் பிரதிநிதிகளும், கைத்தறி உரிமையாளர் பிரதிநிதிகளும் 20-8-1977 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக அளவு வேலைவாய்ப்பு அளிக்க முதலாளிகள் அதிக அளவு நூல் வழங்க வேண்டுமெனவும், கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட துணிகளை விசைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு நூல் வழங்கக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்ட பின்பு முதலாளிகள் (கைத்தறி உரிமையாளர்கள்) வேலை வாய்ப்பை . போதிய அளவு அதிகரிக்கவில்லை எனக்கோரி கைத்தறி நெசவாளர்கள் மறியல் போராட்டம் 5-9-1977 முதல் 10-9-1977 வரை பகுதி, பகுதியாக கரூரில் நடத்தினார்கள். ஆனால் இதுபற்றி கணக்கெடுத்ததில் மாஸ்டர் வீவர்கள் நெசவாளர்களுக்கு முன்பு இருந்ததைவிட அதிக அளவு வேலை வாய்ப்பு அளித்திருந்தனர் என தெரிய வந்தது. எனினும் முழுக்கு நாலைக்கொண்டு கரூர், அதை அடுத்த பகுதிகளில் பெட் ஷீட் ரகங்களை விசைத்தறிகளில் நெய்வதைத் தடுக்க வேண்டுமென்பதே இப்போராட்டத்தின் நோக்கம்.

(ஆ) 11-9-1977 ஆம் தேதியன்று கைத்தறி நெசவாளர் போராட்டக் குழு பிரதிநிதிகள், கைத்தறி உரிமையாளர்கள் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடந்தது. இக்கூட்டத்தில் விசைத்தறிகளில் கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை நெய்வதற்கு கைத்தறி உரிமையாளர்கள் நூல் வழங்கக் கூடாது எனவும் மூடப்பட்ட பாக்டரிகளை உடனடியாக திறக்கவும் நெசவு தொழிலாளர்களுக்கு திரும்ப வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மீண்டும் 24-10-1977 அன்று சென்னையில் கைத்தறி இயக்குநர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் போராட்டக் குழு கைத்தறி உரிமையாளர்கள், கரூர் மற்றும் வெள்ளக்கோயில் பகுதிகளைச் சார்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் ஆகிய முத்தரப்பினர்களைக் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) ஏற்கெனவே ஒப்பந்தம் செய்தபடி படுக்கை விரிப்புகளில் குறிப்பாக 2/2 ரகங்கள் சாதா ரகங்கள் உட்பட விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது.